**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No. 55/2023 |
| Deposition of witness for Prosecution | : | P.W–1 |
| Name | : | மாரியம்மாள், வயது 50 |
| Father Name/Husband Name | : | ராஜேந்திரன் |
| Village | : | ராமலிங்கபுரம் |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | கொத்தவேலை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of June 2023.

**(எதிரி ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது கோவில்பட்டியில் வசித்து கொத்த வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன ராஜேந்திரன் எனது கணவர். கடந்த 21.08.2022 ஆம்தேதி இரவு 07.15 மணியளவில் விபத்து நடந்த இடத்தில் இருந்து எனக்கு போன் மூலம், எனது கணவர் ஜமீன்தேவர்குளத்தில் இருந்து வேலை முடித்து இருச்சக்கர வாகனத்தில் திரும்ப வரும் போது ஜமீன்தேவர்குளத்தின் அருகே உள்ள பாலத்தின் அருகே எதிரிரே வந்த கார் மோதி விபத்து ஏற்பட்டு தலையில் காயப்பட்ட இரத்தம் வந்து கிடப்பதாக சொன்னார்கள்.
2. பின்னர் எனது மகனுக்கு போன் மூலம் தகவல் சொல்லி எனது சம்பவ இடத்திற்கு சென்று எனது கணவரை கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார். நானும் எனது மகனும் மருத்துவமனைக்கு போனோம் பரிசோதனை செய்த மருத்துவர் இறந்துவிட்டதாக சொன்னார்கள்.
3. பின்னர் மேற்படி சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி நாலாட்டின்புதூர் காவல்நிலையத்தில் புகார் அளித்தோம். எனது மகன் புகார் எழுதினார் அதில் நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (**அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** வழகரு பற்றிபோலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1. விபத்திற்கு பின்னர் உங்கள் கணவரை முதல்முதலில் எங்கு சென்று பார்த்தீர்கள் என்றால் மருத்துவமனையில் வைத்துபார்த்தேன். விபத்து

நடந்ததாக தகவல் சொன்னது இரவு சுமார் 08.00 மணி இருக்குமா என்றால் 08.00-08.15 இருக்கும்.

2. உங்கள் ஊரில் இருந்து கோவில்பட்டிக்கு வரவேண்டும் என்றால் ஒருமணிநேரம் ஆகுமா என்றால் ஒருமணிநேரத்திற்குள் தான் ஆகும். நீங்கள் மருத்துவமனைக்கு சென்று ஒருமணிநேரம் இருந்திருப்பீர்கள் என்றால் இல்லை அரை மணிநேரம் இருந்தோம் பின்னர் நாலாட்டின்புதூர் காவல்நிலையம் சென்றுவிட்டோம்.
3. உங்களுக்கு எழுதபடிக்க தெரியாது என்றால் சரிதான். பெயர் மட்டும் எழுதிவேன். கொஞ்சம் வாசிக்க தெரியும். உங்கள் கணவருக்கும் உங்கள் மகன் திருமணம் சம்பந்தமாக உங்கள் மகனுக்கும் பிரச்சனை ஏற்பட்டு அடிக்கடி வீட்டிற்கு வரமாட்டார் என்றால் சரியல்ல. அப்படி இல்லை.
4. அந்தபிரச்சனையினால் உங்கள் கணவர் தினமும் குடித்துவிட்டு வந்து வீட்டில் சண்டை போடுவார் என்றால் இல்லை. உங்கள் கணவர் சம்பதன்று வீட்டில் இருந்து எத்தனை மணிக்கு கிளம்பினார் என்றால் காலை வேலைக்கு 08.30 மணிக்கு போனார். எந்த ஊரில் என்ன வேலைக்கு போனார் என்றால் ஜமீன்தேவர்குளத்தில் கொத்தனார் வேலைக்கு போனார்.
5. ஜமீன்தேவர்குளத்திற்கும் உங்கள் ஊருக்கும் எவ்வளவு தூரம் என்றால் தெரியாது. நீங்கள் புகாரில் சொன்னது போல் உங்களுக்கு எந்த விவரமும் தெரியாது என்றாலும் உங்கள் மகன் மற்றும் மற்றவர்கள் சொன்னதன் பேரில் புகார் கொடுத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.
6. உங்கள் கணவர் ஓட்டிச்சென்ற வாகனம் உங்கள் கணவருக்க பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அந்த வாகனத்திற்கு காப்பீடு மற்றும் பதிவு சான்று இல்லை என்றாலும் ஓட்டுநர் உரிமமும் இல்லை என்றாலும் சரியல்ல ஓட்டுநர் உரிமம் இருந்தது ஆனால் தொலைந்துவிட்டது அதன் நகலை போலிசாரிடம் காண்பித்தேன்.
7. உங்கள் கணவருக்கு தலையில் தான் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். வாகனம் ஓட்டும் போது உங்கள் கணவர் தலைகவசம் அணியவில்லை என்றால் சரிதான். நீங்கள் சொன்ன நாள் நேரத்தில் சொன்னது மாதிரி எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் காவல்நிலையத்தில் சொன்ன நாள்நேரத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. விபத்தை அவரே ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.